No. of Printed Pages : 8

**4611**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்
# Language — Part A — TAMIL — Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38 க்கான படிவம் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க**

**பகுதி - 1**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

**1.** ‘வௌவால்’ - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது?

(அ) ஐகாரக் குறுக்கம் (ஆ) ஔகாரக் குறுக்கம்

(இ) மகரக் குறுக்கம் (ஈ) ஆய்தக் குறுக்கம்

**2.** நிகழ்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்து எழுதுக.

(அ) வந்தான் (ஆ) வருவான் (இ) வருகிறான் (ஈ) வாரான்

**3.** ‘மாடு’ என்னும் சொல் __________ ஆகும்.

(அ) உயர்திணைப் பொதுப்பெயர் (ஆ) அஃறிணைப் பொதுப்பெயர்

(இ) விரவுப் பெயர் (ஈ) வெளிப்படை

[ திருப்புக

4. கருமை + குழி என்பது ____________ எனும் விதிகளின்படி புணரும்.
(அ) ஆதிநீடல், இனமிகல்
(ஆ) தன்னொற்றிரட்டல், இடையுகரம் இஆதல்
(இ) ஈறுபோதல், இனமிகல்
(ஈ) அடிஅகரம் ஐ ஆதல், முன்னின்ற மெய் திரிதல்

5. பாடாண்திணை என்பது ____________ கூறுவது.
(அ) ஆண்மகனின் ஒழுகலாறுகள் (ஆ) பெண் மகளின் ஒழுகலாறுகள்
(இ) போரின் தன்மைகள் (ஈ) வெற்றி பெற்றோர் ஒழுகலாறுகள்

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. திருமால் ____________ நிலத்திற்குரிய தெய்வம்.

7. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ____________ முடிவது சிறப்பு.

8. கனிவாய் என்பது ____________ என மாறினால் உருவகமாகும்.

9. வினா ____________ வகைப்படும்.

10. வைகறை - இச்சிறு பொழுது ____________ திணைக்குரியது.

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க.** **10x1=10**

11. வல்லினம் மிகுமிடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. நாற்றிசை - இச்சொல்லை விரித்தெழுதுக.

13. படி - இச்சொல்லை பெயரெச்சமாக்குக.

14. இளமையில் கற்க வேண்டும் – இத்தொடரைக் கட்டளைத் தொடராக மாற்றுக.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டு இருந்தார்கள்.

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
பண்டைக் காலத்து வாணிக பொருள்கள் துறைமுக நகரங்களிலிருந்து ஏற்றுமதியாயின.

17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
கோவிலில் அபிஷேகம் முடிந்ததும் ஆராதனை நடந்தது.

18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழுவுச் சொற்களை நீக்கி எழுதுக.
ஆத்தங்கரை அருகாமையில் நாகரிகம் தோன்றியது.

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
காந்தியடிகள் கொள்கை இல்லாத அரசியல் உழைப்பில்லாத ஊதியம் நாணயம் இல்லாத இன்பம் அறமில்லாத வழிபாடு ஆகியவற்றால் பயனில்லை என்றார்.

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
ஆகாயத்தாமரை.

## பிரிவு – II

(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** **5x2=10**

21. ஒளகாரக் குறுக்கத்தைச் சான்றுடன் விளக்குக.

22. மொழியின் வகைகள் யாவை?

23. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

24. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

25. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

[ திருப்புக

26. குறுகினன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. வெண்பாவின் வகைகள் யாவை?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

**குறிப்பு :** பகுதி **3** இல் வினா எண் **35** இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** 2x5=10

28. "பாரி பாரி என்று பலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே"
- இப்பாடல் எப்பாவகையைச் சார்ந்தது? அதன் இலக்கணம் தருக.

29. "தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்" - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

**அல்லது**

பிறிது மொழிதலணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** 2x5=10

31. குறட்டை ஒலி கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.

32. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.

33. தகவலறியும் உரிமைச் சட்டம் குறித்து எழுதுக.

## பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி, தன் ஸ்கூல்பேக்கைத் தூக்கிப் போட்டுவிட்டு "மம்மி வாட்டர்" என்று குரல் கொடுத்தான். கை கால்களை வாஷ் செய்து கொண்டு வா, உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன் ; போய் யூனிபார்ம் மாற்றி வா என்றாள், அவன் தாய்.

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுக.

21, 79, 358, 46.

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

(ஆ) கீழ்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Money make many things.
(2) Prevention is better than cure.
(3) Man Proposes ; God disposes.
(4) Familiarity breeds contempt.

35. **குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.** 5x1=5

பரிதிமாற் கலைஞர், சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் படித்த போது கல்லூரி முதல்வராக இருந்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் மில்லர். ஆங்கில பேராசிரியரான அவர் ஒரு நாள், டென்னிசன் இயற்றிய ஆர்தரின் இறுதி என்னும் நூலில் உள்ள ஒரு பாடலை நடத்தினார். அதில் துடுப்புகளை அசைத்துச் செலுத்தப்பட்ட படகானது அழகிய அன்னப்பறவைக்கு உவமையாக்கப் பட்டிருந்தது. அதனைப் பாராட்டிய மில்லர் "தமிழிலும் இதுபோன்ற உவமை ஏதேனும் உண்டோ?" என்று மாணவர்களிடம் வினவினார். அதற்குப் பரிதிமாற்கலைஞர், "பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே கம்பராமாயணக் குகப்படலத்தில் இத்தகைய உவமை உள்ளது" என்று கூறி, 'விடுநனி கடிது' என்னும் அப்பாடலைப் பாடியும் காட்டினார்.

(1) பரிதிமாற் கலைஞர் எக்கல்லூரியில் கல்வி பயின்றார்?
(2) கல்லூரியின் முதல்வர் யார்?
(3) டென்னிசன் இயற்றிய நூல் எது?
(4) கல்லூரி முதல்வர் எத்துறையைச் சார்ந்தவர்?
(5) படகு - அன்னப்பறவைக்கு உவமையாகக் கூறப்பட்ட தமிழ் நூல் எது?

[ திருப்புக

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலைவேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றிது. அப்போது ______

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை ஒன்றை எழுதுக.

முயற்சி அல்லது நட்பு.

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக. 1x5=5

மனிதரெல்லாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்

- பாரதிதாசன்.

## பகுதி - 6

38. மேகலா என்பவர் வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்க வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை மேகலாவாக பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினை தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க. **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. **3+2=5**

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறுவான். ஆனால், அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்யவேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப் படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்புச் சொல்லித்தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்கு பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப் படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

(1) பாண்டியன், தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான்?

(2) நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

(3) இக்சூழலில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய திறன் என்ன?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கிறான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

(1) பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?

(2) நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ளவேண்டும்?

[ திருப்புக

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **1x10=10**

(அ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**அல்லது**

(ஆ) பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்க்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

### பகுதி - 2

41. **கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** **1x10=10**

(அ) முன்னுரை - சேமிப்பு - சிக்கனம் - சேமிக்கும் வழிகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை.

**அல்லது**

(ஆ) செம்மொழி - தகுதிப்பாடுகள் - இலக்கண இலக்கிய வளம் - தனித்தன்மைகள் - மொழியியலார் கூற்றுகள்.

- o 0 o -